மக்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 27 புதன்கிழமை [13-11-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 344

# இடம்பெயர்ந்த மக்கள் நேற்று செயலகத்தில் ஆர்ப்பாட்டம்!

## அத்தியாவசியசேவை ஆணையாளர் சமாதானப்படுத்தி அனுப்பினார்

யாழ்ப்பாணம், நவம்பர் 13

யாழ். குடாநாட்டின் கரையோரங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களும், இராணுவ நடவடிக்கைகளினால் தொழில் இழந்த மக்களும் நேற்றுப் பேரணியாகச் சென்று யாழ். செயலகத்தில் பெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது செயலகத்தின் மேல்மாடி ஜன்னல் கண்ணாடிகள் சில அடித்து நொறுக்கப்பட்டன.

அச்சமயம் செயலகத்தில் இருந்த—அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் டாக்டர் தேவநேசன் நேசையா பாதிப்புற்ற மக்களை சமாதானம் செய்து அனுப்பிவைத்தார்.

அராலி, கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர், நாவாந்துறைப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களும், வகுப்புத் தொழிலாளர்களும், இராணுவ நடவடிக்கைகளினால் பாதிப்புற்ற மக்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பேரணி நேற்றுக் காலையில் நாவாந்துறைப் பகுதியில் ஆரம்பமானது.

ஆயிரக் கணக்கானோர் பேரணியில் பங்குபற்றினர்.

பச்சிளம் குழந்தைகளைக் கையில் ஏந்தியபடி தாய்மார்கள் கூட்டத்தில் முன்னணியில் வந்தனர். உணவின்றி ஒட்டிய உடம்புகளுடன் மாற்றுடையின்றி கிழிந்த சேலை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தனித் தமிழ் நாடு வேண்டி தமிழகத்தில் 20அமைப்புகள்

கொழும்பு, நவ. 13

தனித் தமிழீழம் போல இந்தியாவில் தனித் தமிழ் நாடு ஒன்றை ஸ்தாபிக்கும் முயற்சியில் சுமார் இருபது குழுக்கள் ஈடுபட்டிருக்கின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான "சண்டே டைம்ஸ்" பத்திரிகையில் வெளியான—சென்னைப் பத்திரிகையாளர் ஒருவரின் கட்டுரையில் — இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் இயங்கும் "தமிழ் தேசிய மீட்புப் படை" என்ற அமைப்பைச் சேர்ந்த — ஆகக்குறைந்த பத்துப் பேருக்கு — யாழ்ப்பாணத்தில் ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் கலகம் செய்வதற்காக இந்தியத் தமிழருக்கு பயிற்சியளிக்கும் விடுதலைப் புலிகளின் திட்டம் ஒன்றை தமிழகப் பொலீஸார் அண்மையில் கண்டுபிடித்திருக்கின்றனர்.

இது தொடர்பாக 12 பேரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

### தமிழீழம் முதற்படி

இந்தக் குழுவைத் தவிர மேலும் சுமார் இருபது வரையான அமைப்புகள் தனித்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## நேற்று முன்தினமும், நேற்றும் வவுனியா, முல்லைத்தீவில் விமானக் குண்டு வீச்சுகள்

யாழ்ப்பாணம், நவ. 13

வவுனியாவின் சில பகுதிகளிலும் முல்லைத்தீவு மாவட்டம் கிரவத்தையிலும் நேற்று முன்தினமும், நேற்றும் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் காலை பாலமோட்டை 29 ஆம் யூனிட் பகுதியில் மூன்று பொம்மர்கள் குண்டுவீச்சுக்களை நடத்தின.

குண்டு வீச்சில் இராசதுரை (60 வயது) என்பவர் படுகாயமடைந்தார். ஆலயம் ஒன்றும், இரு வீடுகளும் பலத்த சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை கோழியகுளம், மகிழங் குளம் பகுதிகளில் மூன்று பொம்மர்கள் தாக்குதல்களை மேற்கொண்டன. அதனால் அங்கு வீடுகள் பல [illegible] என்றும் [illegible]

## முச்சந்தி முரளி



ஆனைப்பசிக்கு சோளப் பொரி மாதிரி எல்லோ கிடக்கு ......!

## படையினர் சூடு; ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 13

கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை குடியிருப்புகளை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். அதே சமயம் ஷெல் தாக்குதல்களையும் நடத்தினர். (ஒ)

## கலுவன்கேணியில் 8 இளைஞர் கைது

யாழ்ப்பாணம், நவ. 13

மட்டக்களப்பு மாவட்டம், களுவன்கேணி கிராமம் கடந்த வெள்ளிக்கிழமை சுற்றிவளைக்கப்பட்டு, அங்கு எட்டுத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## ஆனையிறவுப் பாதை திருத்தப்படுகிறதாம்!

கொழும்பு, நவ. 13

ஆனையிறவுக்கு வடக்கே யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் பிரதான நெடுஞ்சாலையை பாதுகாப்பு படையினர் செப்பனிட்டுத் திருத்தி வருகிறார்களென்று இலங்கை வானொலி நேற்று அறிவித்தது. (உ-எ)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ. 13

நிலைத்தில் நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து அங்கிருந்து வடலி வழியாக நீந்தி வந்த வீரவேங்கை செலிதிர் [illegible] [illegible] அடைந்தார். (ஒ)

## வங்கி ஊழியர் ஊர்வலம்

யாழ்ப்பாணம், நவ. 13

கஷ்ட நிவாரணப் படி வழங்கக் கோரி வங்கி ஊழியர்களும் நேற்றுப் பகல் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஊழியர்கள் இணைந்து ஊர்வலமாகச் சென்று தங்கள் கோரிக்கை சம்பந்தமான மகஜர் ஒன்றை அரசாங்க அதிபரிடம் கையளித்தனர். (அ-8)

## தனியாக 'டாங்கி' கப்பலில் ம. எண்ணெய் தருவிக்குக!

### தொண்டர் நிறுவனங்கள் ஆலோசனை

யாழ்ப்பாணம், நவ. 13

மண்ணெண்ணெயை தனியாக டாங்கிக் கப்பலில் காங்கேசன்துறைக்குக் கொண்டு வர வேண்டும். அவ்வாறு செய்தால் மற்றைய கப்பல்களில் மண்ணெண்ணெய்க்கு ஒதுக்கப்படும் இடத்தில், முற்றாக உணவுப் பொருள்களையே கொண்டு வரமுடியும்.

இவ்வாறு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினர், நேற்றுச் செயலகத்தில் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் ஆலோசனை தெரிவித்தனர்.

பிரதேச கலந்துரையாட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சவர்க்காரம், சலவைத்தூள் கொழும்பு விலைக்கு!

### இன்றுமுதல் பங்கீட்டுக்கு கிடைக்கும்

யாழ்ப்பாணம், நவ. 13

கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட ஒரு தொகுதி சவர்க்காரம், சலவைப்பவுடர் என்பன இன்று முதல் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

சவர்க்காரக் கட்டிகளும், சலவைப் பவுடர் பக்கெட்டுக்களும் அவற்றில் குறிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையில்—கொழும்பு விலையில்—குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கையும் அவர்களுக்கு விநியோகிக்கப்படும் சவர்க்காரத்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஓய்வூதியர், அரச ஊழியருக்கு ரூ. 100 அலவன்ஸ் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 13

நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் அரச ஊழியரின் சம்பளத்தில் நூறு ரூபா கூடுதலாகக் கிடைக்கும்.

அரச ஊழியருக்கு மாதாந்தம் சம்பளத்துடன் வழங்கப்படும் வாழ்க்கைப் படியே ஜனவரியிலிருந்து நூறு ரூபாவால் அதிகரிக்கப்படுகிறது.

மூவாயிரம் ரூபாவுக்குக் குறைந்த சம்பளத்தைப் பெறும் அரச, உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களும் ஓய்வூதியரும் இந்த அதிகரிப்பைப் பெறுவர்.

இந்த அதிகரிப்புக் கொடுப்பனவை வழங்குவதற்காக 150 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (கு-எ)

## வட - கிழக்குப் போரினால் பொருளாதாரம் அழிகிறது!

### பட்ஜெட்டை சமர்ப்பித்து பிரதமர் உரை

கொழும்பு, நவ. 13

வடக்கு — கிழக்குப் போரினால் நாட்டின் பொருளாதார நிலை தளர்வடைந்து செல்வதாக பிரதமரும் நிதி அமைச்சருமான டி.பி. விஜெதுங்க நேற்று நாடாளுமன்றத்தில் வருத்தம் தெரிவித்தார்.

நேற்றுச் சபையில் வரவு—செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்:

நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையாமல் வடக்கு யுத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

திருநீற்றுப் பச்சை இலைகளும், துளசி இலைகளும் தேவை. விலை கொடுத்து வாங்கப்படும். அண்ணா தொழிலகம், இணுவில். [சி/0792]

## ரைப்பிங் சேவை

தமிழ் - ஆங்கில (Stencils) ரைப்பிங் வேலைகள் மற்றும் தமிழ் ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகின்றன. ரைப்ரைட்டர் திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும். ரைப்ரைட்டர் திருத்த விற்பனைக்கு உண்டு. பியூ. 39/17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் 3 ஆம் ஒழுங்கை. கிளை: பிரதான வீதி, மானிப்பாய். [சி/0791]

## இடமாற்றம்

தீவகத்தில் ஊர்காவற்றுறை வேலணை, புங்குடுதீவில் சேவையாற்றிய 'பக்கியம் குழந்தைகள்' வைத்தியசாலை தற்காலிகமாக கல்வியங்காட்டில் இருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள இருபாலைச் சந்தி, குமரபுரம் இல்லத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. நிர்வாகம். [18700]

வேலணை மேற்கில் இயங்கி வந்த "நமசிவாயம் வைத்திய நிலையம்" தற்பொழுது ஐயனார் கட்டடம் பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய் என்னும் முகவரியில் இயங்கி வருகிறது என்பதை அறியத் தருகின்றேன். டாக்டர் செ. ந. சிவபாலன். D. A. M. & R. I. M. P. (Cey.) [18727]

---

# விண்ணக வாழ்வின் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:
17 - 5 - 1968



அமலன் அடியில்:
13 - 11 - 1988

## டேவிற் அலன் - அன்ரன்

"சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்தில் மறவாதீர்கள்"

உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

42/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (18729)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 03 — 09 — 1942



விண்ணில்: 14 — 10 — 1991

## சவரிமுத்து சாமிநாதன் (மதுரம்)

[ஞானம்ஸ் ஸ்ரூடியோ ஊழியர்]

"உங்கள் பாதச் சுவடுகள் பட்ட வீட்டிலிருந்து"

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், தாய்,
மற்றும் குடும்பத்தினர், ஊழியர்கள்.

19/6, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம். [18730]

---

அளவெட்டி, மல்லாகம்,
தெங்கு - பனம் பொருள் உற்பத்தி
விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்.

# பதவி வெற்றிடம்

**1. பதவி:- உற்பத்தி முகாமையாளர்**

சம்பளத்திட்டம்: 306 . 7 - 9 க்கு அமைய,
1105 - 60 x 4, 4 x 75 - 2170-
இதர படிகளும்

தகைமை:

[அ] கூட்டுறவுப் பணியாளர் 8 ஆவது சம்பளத் திட்டத்திலுள்ள பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

[ஆ] கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத் திட்டத்திலுள்ள பதவியில் 6 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

[இ] க. பொ. த. உயர்தரம்-இரசாயனவியலில் திறமைச்சித்தி உட்பட 3 பாடங்களில் சித்தியும், கள்ளுசார் மூலவள உற்பத்தித் துறையில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும். பனை, தென்னை மூலவள உற்பத்தித் துறையில் பெற்றுள்ள அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

வயது: 21 — 40 க்கு உட்பட்டவர்கள்

**2. பதவி - மேற்பார்வையாளர்**

சம்பளத் திட்டம்: 209.8 - 10 க்கு அமைய
1005 - 40x5 50x10-1705-
இதர படிகளும்

தகைமை: க. பொ. த. (சா/த) பரீட்சையில் தமிழ், கணிதம் விசேட சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி.
2 வருடம் மேற்பார்வை மட்டத்திலான அனுபவம்.

வயது; 25 — 35 க்கு உட்பட்டவர்கள்

விண்ணப்ப முடிவு திகதி: 25 - 11 - 1991

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

தலைவர்,
சுன்னாகம், அளவெட்டி, மல்லாகம்,
தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்,
மல்லாகம். [18721]

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
15-11-1915



மறைவு:
14-11-1989

## அமரர் டாக்டர் வி. ஜே. ஞானநாயகம்

"சீவியத்திலும் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

14-11-1991 பிற்பகல் 4 மணிக்கு அன்னாரது இல்லத்தில் ஞாபக ஆராதனை இடம்பெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்களைப் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், அன்பார்ந்தவர்கள்.

ஞான மகால்,
88/3, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். [18726]

---

# சிறைக் கைதிகளை புலிகள் நன்கு பராமரிக்கின்றனர்!

## செஞ். அதிகாரி கொழும்பில் தகவல்

கொழும்பு, நவ. 13

"தங்களால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் நல்ல முறையில் நடத்திவருகின்றனர்."

—செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தலைவர் திரு. பியரோ வெற்றாச் இவ்வாறு கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்தார்.

போர்க் கைதிகளை விடுதலைப் புலிகள் என்ன செய்யவிருக்கிறார்கள் என்பது தமக்குத் தெரியாது என்றும் அவர் சொன்னார்.

போர்க் கைதிகளைச் சென்று பார்ப்பதற்கு அவர்களது உறவினர்களுக்கு அரசு அனுமதியளிக்குமானால் அவர்களை யாழ்ப்பாணத்திற்கு கூட்டிச் செல்ல தாம் தயாராக இருப்பதாகவும் திரு. வெற்றாச் சொன்னார். [உ-எ]

---

# Computer Programming in Basic Language

4 மாதங்கள்

புதிய பிரிவு ஆரம்பம்: 19 - 11 - 1991

*I. A. B [Book-Keeping]*
Foundation & Inter

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்: 16 - 11 - 1991

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3 ஆம் குறுக்கு வீதி
யாழ்ப்பாணம். [சி-0896]

---

# புதிய உயர் கல்லூரி

**NEW COLLEGE OF HIGH STUDIES**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## [வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள்]

யாழ். பல்கலைக் கழகத்திற்கான

*G.A.Q., 1st in Com.*

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன;

★ DRAMA and THEATRE (நாடகமும் அரங்கியலும்)
★ FINE ARTS [நுண்கலை]
★ HISTORY [வரலாறு]
★ ENGLISH LITERATURE

ஆகிய பாடங்களுக்கான விரிவுரைகள்,
ஆரம்பம்: 16 - 11 - 1991

★ பேராதனை பல்கலைக்கழகத்திற்கான G. A. Q. விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

நிர்வாகி,
S. அருள்நங்கை.

(சி-0787)

---

## பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி [கலைமாணி] B. A. விரிவுரைகள்

1991 ஏப்ரல் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான [கலைமாணி B A] இறுதிப் பரீட்சைக்குரிய விரிவுரைகள் 16 - 11 - 1991 இல் ஆரம்பமாகின்றன.

உதவிப் பதிவாளர்,
**பட்டப் படிப்புகள் கல்லூரி,**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- G. A. Q., FIRST in COMMERCE விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

[கி-0894]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஆறுதல் தருவது

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்றிருக்க வேண்டிய ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சை வடக்கு-கிழக்கில் நடைபெறவில்லை.

அவ்வேளை தமிழ்ப் பகுதிகளில் நிலவிய பாதுகாப்பு நிலைமையைக் காரணம் காட்டி பரீட்சை இங்கு நடத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக விசேட பரீட்சை ஒழுங்கு செய்யப்படும் எனக் கூறப்பட்டதே அன்றி, பிரஸ்தாப பரீட்சை எப்போது நடத்தப்படும் என்பது குறித்து திட்டவட்டமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை.

அதனால் தமிழ் மாணவர்களின் கல்வி குழம்பியது எனலாம். பரீட்சை எப்போது நடைபெறப் போகிறது என்பது தெரியாமல் மாணவர் கல்வியில் அக்கறையைக் குறைத்துள்ளனர். இது அவர்களின் பெறுபேறுகளில், பல்கலைக்கழகப் பிரவேசத்தில் பெருமளவில் பாதிப்பு ஏற்படுத்துவது நிச்சயம்.

கடந்த ஆகஸ்டில் நடைபெறாத பரீட்சைக்குப் பதிலாக ஜி. சீ. ஈ. உயர்தர விசேட பரீட்சை அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் இப்போது அறிவித்திருக்கிறார். இப்போதாவது விசேட பரீட்சையை நடத்தும் காலம் குறித்து தெளிவாக்கப்பட்டுள்ளது அதற்காகக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு நன்றி கூறலாம்!

ஆனால் தாம் அறிவித்திருப்பது போலவே பரீட்சை உரிய காலத்தில் நடக்க அவர் பார்த்துக் கொள்வாரா? பரீட்சைத் திணைக்களம், பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள் காட்டி அதனை மீண்டும் ஒத்திவைக்காமல் இருக்கப் பார்த்துக் கொள்வாரா?

மேலும், பரீட்சை எட்டு மாதங்கள் பிந்தி நடந்தாலும், பல்கலைக்கழகப் பிரவேசத்தைப் பொறுத்த மட்டில், மாணவர்கள் 1991 ஆகஸ்டில் பரீட்சைக்குத் தோற்றியவர்களாகவே கருதப்படுவர் — எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் கடிதத்தில் உறுதி அளித்துள்ளார்.

இது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். அரசாங்கம் பரீட்சைகளை நடத்தாமல் விட்டு விட்டு, மாணவர்களின் கல்விக் காலத்தை ஓராண்டு, ஈராண்டு என்று பின் தள்ளுவதே இது வரை நடைபெற்று வந்தது. அதனால் பல தடவைகளில் தமிழ் மாணவர்களின் கல்விக் காலம் வீணடிக்கப்பட்டது உண்டு.

இம்முறை அவ்வாறில்லாமல், உரிய காலத்தில் பரீட்சை நடந்திருப்பின் எவ்வாறு கணிக்கப்படுமோ, அவ்வாறே ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைக்குத் தோற்றுவோர் கணிக்கப்படுவர் என்று அறிவித்திருப்பது சற்று ஆறுதலாக உள்ளது.

எனினும் பரீட்சைகள் ஒத்திவைக்கப்படுவதால், தமிழ் மாணவர்கள் தமது கல்விப் பருவத்தின் ஆண்டுகளை வீணாக இழக்காமல் பார்த்துக் கொள்வது அவசியம். அதனால் அவர்களின் வாழ்க்கையே பாதிக்கப்படும் என்பதை உணர்ந்து அரசு பரீட்சைகளை ஒத்தி வைக்காமல் அந்தந்தக் குறிப்பிட்ட காலத்தில் நடத்துவது எப்போது?

# உணவு நெருக்கடியை நீக்க உதவும்படி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 13

''யாழ் மாவட்டத்தில் உருவாகியுள்ள உணவு நெருக்கடி நிலை குறித்து உடன் அரசின் கவனத்துக்கு கொண்டு வந்து, அதனை நீக்குவதற்கு உதவ வேண்டும்.''

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற இருவேறு கூட்டங்களில் அத்தியவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் டாக்டர் தேவநேசன் நேசையாவிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடந்த முதலாவது கூட்டத்தில் கலந்துகொண்ட, அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளரிடம் இங்கு தேவையான பொருள்களின் விவரம், தற்சமயம் குடாநாட்டின் உணவு நிலை, தட்டுப்பாடு நிலை நீக்குவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கை ஆகியன குறித்து விவரமாக எடுத்துக் கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் இணையத்தின் பிரதிநிதிகளையும் டாக்டர் தேவநேசன் சந்தித்து கலந்துரையாடினார்.

இங்கும் குடாநாட்டில் நிலவும் கஷ்ட நிலையை அரசின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. (அ-3)

### தனியாக....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லில் அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் டாக்டர் தேவநேசன் நேசையா கலந்து கொண்டார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் தனது பணிகளைச் செய்வதற்குச் சுதந்திரமாக உள்ள வசதியீனங்கள் குறித்து டாக்டர் தேவநேசனிடம் எடுத்து விளக்கப்பட்டது.

பின்வரும் விடயங்களும் கலந்துரையாடலின் போது முன்வைக்கப்பட்டன

★ பருத்தித்துறை துறைமுகத்தில் செயற்படும் நிலையில் மூன்று மீனவப் படகுகளே இப்போது உள்ளன. மேலும் ஐந்து மிதவைப் படகுகள் ஏற்பாடு செய்யப்பட்டால் மாத்திரம் உணவுப் பொருள்களுடன் வரும் கப்பல்களின் எண்ணிக்கையை இரண்டிலிருந்து அதிகரிக்க முடியும்.

★ யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் அகதிகளின் எண்ணிக்கை திடீரென மிகப் பெருமளவில் அதிகரித்துள்ளது. தற்காலிகமாகப் பாடசாலைகளில் தங்கியுள்ளவர்களுக்கு மாற்றுத் தங்குமிட வசதி அளிப்பது மிகக் கஷ்டமாக உள்ளது.

★ இராணுவ நடவடிக்கைகளினால் குடாநாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் தொழில் இழந்துள்ளனர். அதனால் அவர்களுக்கு அவசர நிவாரணம் வழங்க வேண்டியுள்ளது. குடாக்கடலில் மீன்பிடிக்க வசதி செய்யப்பட்டால் அந்த நிவாரணத்தைக் குறைக்க முடியும். (அ-5)

### தனித் தமிழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் நாடு அமைக்கும் கொள்கையுடன் இயங்கி வருகின்றன.

இவற்றில் சில அமைப்புக்கள் நக்ஸலைட் இயக்கம் போன்றவை.

தனித் தமிழ்நாடு அமைப்பதற்கான முதற்படியாக தமிழீழம் அமைக்கப்பட வேண்டும் என்ற சித்தாந்தத்துடன் இந்த அமைப்புகள் இயங்குகின்றனவாம்,

ஆனால் இந்தக் குழுக்களுக்கு மக்கள் ஆதரவு இல்லை என்று தமிழகப் பொலிஸ் கூறுகிறது.

''தமிழ் மக்கள் சமாதானத்தை விரும்புபவர்கள். அவர்களுக்கு பிரிவினையில் நம்பிக்கை இல்லை'' — இப்படி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் சொன்னார்.

ஆனால் பலர் பொலிஸாரின் இத்தகைய நம்பிக்கைக் கூற்றை ஏற்கவில்லை.

—இப்படி அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வட - கிழக்கு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தம் தடுத்து வருகிறது

பாதுகாப்புச் செலவுக்கும், அகதிகள் நிவாரணத்துக்கும் என பெரும்தொகை நிதி விரயமாகிப்போகிறது.

வடக்கு — கிழக்கு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டால், நடுத்தடையின்றி சுபீட்சம் காணவழிபிறக்கும்; நாடு வளம் பெறும்— என்று அவர் மேலும் தெரிவித்தார்.

உலக வங்கியின் விருப்பத்துக்கு ஏற்ப திட்டங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன என்று—

பல அரச கூட்டுத்தாபனங்கள் தனியாரிடம் விற்கப்படுகின்றன என்றும் அவர் மேலும் சொன்னார். [உ-3]

### சவர்க்கார..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தின் அளவும் வருமாறு:-

★ ஒன்று அல்லது இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு 17 ரூபா 50சதம் விலையுள்ள 275கிராம் சலவைப் பவுடர் பக்கெட் ஒன்று.

★ மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்துக்கு ஐந்து ரூபா 50 சதம் பெறுமதியான வொண்டலைற் சவர்க்காரக் கட்டி ஒன்றும். 3 ரூபா 25 சதம் விலையுள்ள சலவைப் பவுடர் பக்கெட் ஒன்றும்.

★ நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்துக்கு 17 ரூபா 50 சதம் விலையுள்ள 275 கிராம் சலவைப் பவுடர் பக்கெட் ஒன்றும். 3 ரூபா 25 சதம் பெறுமதியான 50 கிராம் சலவைப் பவுடர் பக்கெட் ஒன்றும்.

★ ஐந்து அங்கத்தவர்களையும் அதற்கு மேற்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட குடும்பத்தினருக்கு ஐந்துரூபா 50 சதம் பெறுமதியுள்ள வொண்டலைற் சவர்க்காரக் கட்டி ஒன்றும், 31 ரூபா 50 சதம் விலையுள்ள 550 கிராம் சலவைப் பவுடர் பக்கெட் ஒன்றும்.

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் இந்த விலை விவரங்களை நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தார். (உ-5)

# தொடர்ந்து தீவக மக்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவம்பர் 13

தீவகம் மற்றும் யாழ். நகரின் கரையோரப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு தொடர்ந்து உலர் உணவு விநியோகிக்க வேண்டும் என்று, யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் திரு. தேவநேசன் நேசையாவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

நேற்று யாழ் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர். [உ-8]

# இந்தியா மீண்டும் வெற்றி!

தென் ஆபிரிக்காவிற்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியிலும் இந்திய அணி வெற்றியீட்டியது.

குவாலியூரில் நேற்று இடம்பெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 45 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 223 ஓட்டங்களை எடுத்தது.

தென் ஆபிரிக்க அணியினால் 45 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 185 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.

தாமதமாக போட்டி ஆரம்பமானதால் 45 ஓவர்களாக ஆட்டம் மட்டுப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. [உ-எ]

### இடம் பெயர்ந்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களும் வயோதிபர்களும் குழந்தைகளும் கூட பேரணியில் கலந்து கொண்டார்கள்.

ஆஸ்பத்திரி வீதி வழியாகச் சென்ற பேரணி செயலகத்தை அடைந்ததும், பேரணியில் வந்தோர் செயலகத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

செயலக மேல்மாடியில் இருந்த அரச அதிபரின் அலுவலக அறைவரை ஆர்ப்பாட்டகாரர்கள் சென்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகள் அரச அதிபரிடம் சென்று தமது நிலையை எடுத்துரைத்தனர்; தமது கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

இராணுவ நடவடிக்கைகளினால் தொழிலிழந்த மக்களின் அவல நிலையை அவர்கள் அரச அதிபரிடம் விளக்கினர்.

தொழில் இழந்ததால் மீனவக் குடும்பங்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதையும்—

தொழிலிழந்த குடும்பங்களுக்கு உடன் நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் மகஜர் மூலம் அரச அதிபருக்கு தெரிவித்தனர்.

### பாதுகாப்பு பிரதேசமாக்குக

மீனவர்கள் அச்சமின்றி தமது தொழிலை மேற்கொள்ள வசதியாக—

பண்ணை வீதிக்கு கிழக்குப் புறமாகவும், மேற்குப் புறமாகவும் உள்ள ஏரிக் கடற் பரப்பையும்—

கல்முனைக்கு வடக்குப் பக்கமாக உள்ள ஏரிக் கடற்பரப்பையும்—

மண்டைதீவுக்குக் கிழக்காகவும், கல்முனைக்குத் தெற்காகவும், பாலைதீவுக்கு வடக்காகவும் —வலைப்பாடு வரையுமுள்ள—கடற் பரப்பையும்—

பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்த வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினர்.

எரிபொருள், உணவுப்பொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கான பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும் என்றும் அவர்கள் அடித்துக் கூறினர்.

பாதிப்புற்ற மக்களின் ஆர்ப்பாட்டம் ஒரு நிலையில் உச்சக் கட்டத்தை அடைந்தது.

அச்சமயம் யாழ். செயலகத்தில் கூட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்த அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் டாக்டர் தேவநேசன் நேசையா குறுக்கிட்டார்.

ஆர்ப்பாட்டம் செய்யும் மக்களிடம் சென்ற அவர் அந்த மக்களைச் சமாதானப் படுத்தினார்.

அவர்களின் கோரிக்கையையும், அதன் நியாயத்தையும் தாம் உணர்வதாக அவர் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் மகஜர் ஒன்றையும் அவர் ஏற்றுக்கொண்டார். அவருடன் அரச அதிபரும் கூட நின்றார்.

பின்னர் ஆர்ப்பாட்டம் நடத்தியோர் செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் வரை பேரணியாகச் சென்று அங்கும் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்

மக்கள் பேரணியில் நிவாரணம் வழங்கக் கோரியும், மற்றும் விடயங்களை முன்வைத்தும் பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன. [உ-ஓ-3-5-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவுப் பகுதியினர் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ். செயலகத்தில் இன்று காலை 9 மணிக்கு, அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் திரு. தேவநேசன் நேசையாவுடன், கூட்டுறவுப் பகுதியினர் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது ப. நோ. கூ. சங்கங்கள் எதிர்நோக்கும் உணவு விநியோகம் தொடர்பான கஷ்டங்கள் குறித்து ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சகல ப. நோ. கூ. சங்கத் தலைவர்களையும் இச்சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைச் செயலாளர் கேட்டுள்ளார். (ஓ)

## 'சார்க்' குறித்து சபையில் அறிக்கை

கொழும்பு, நவ. 13

சார்க் மாநாடு ஒத்திவைக்கப்பட்டது தொடர்பான அறிக்கை ஒன்றை வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் நாடாளுமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பித்தார்.

சார்க் மாநாடு ஒத்தி வைக்கப்பட்டதற்குக் காரணம் ஸ்ரீலங்கா அரச பூட்டான் மன்னருக்கு அழைப்பை முறைப்படி கையளிக்காததே என்று கூறப்படுவதை அமைச்சர் அந்த அறிக்கையில் மறுத்தார். (உ-எ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 13

ஆண்டு 9க்குரிய வரலாற்று நூல் எழுதுதல் பற்றிய கலந்துரையாடல், யாழ். பல்கலைக் கழக வரலாற்றுத்துறையில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கிற்குச் சமூகக்கல்வி ஆலோசகர்களையும், வரலாற்றுத்துறையில் ஆர்வமுள்ளவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஓ)

## நிறைவு விழா

குருநகர், நவ. 13

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலைய 21 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கிறிஸ்து ராசா ஆலய மைதானத்தில் நடைபெறும். [இ-51]

## இன்று விவாதம்

கொழும்பு, நவ. 13

வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் இன்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் ஆரம்பமாகும்.

வாக்களிப்பு இம்மாதம் 22 ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## நிழல் மரங்கள் நடத் திட்டம்

யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் நிழல் மரங்களை நடுவதற்கு யாழ். மாநகராட்சி சபை திட்டமிட்டுள்ளது.

நிழல் மரங்களை நட்டுப் பராமரிக்கக் கூடிய சனசமூக நிலையங்கள், பொது ஸ்தாபனங்கள் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. (த)

## தருமப்பணம்

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வயாவிளான் தபாலகம் மூலமாக பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கான அக்டோபர் மாதக் கொடுப்பனவு உ. அ. அதிபர் பணிமனையில் வைத்து திங்கள் முதல் வழங்கப்பட்டு வருகிறது. [உ]

## படையினருக்காக மீன் பிடிக்கும் மீனவர்கள்!

பூநகரிப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் ஸ்ரீலங்காப் படையினரிடம் சிக்கியுள்ள மீனவர்களை அவர்கள் பலவந்தமாக மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபடுத்தி வருகின்றனர் என்று தெரியவருகிறது.

கடந்தமாத இறுதியில் கைதான குருநகர், பாஷையூர் மீனவர்கள் நால்வர் இதுவரை திரும்பி வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

படையினருக்குத் தினசரி தேவைப்படும் மீன்வகைகளை இந்த மீனவர்கள் துப்பாக்கி முனையில் பிடித்துத் தருவதாகக் கூறப்படுகிறது.

இதேசமயம்—

பூநகரி, பள்ளிக்குடாப் பகுதியில் கைதான வேறு இரு மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரியவந்தது. (ஓ-51)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 ... 13-11-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தனியார்துறை ஊழியருக்கு வருமான வரிச் சலுகை!

கொழும்பு, நவ. 13

புதிய வரவு செலவுத் திட்டத்தின்படி தனியார் துறையில் பணிபுரியும் ஊழியர்களில், மாதாந்தம் 5 ஆயிரம் ரூபாவை அல்லது அதற்குக் குறைந்த தொகையைப் பெறுவோருக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

தனிப்பட்டவர்களின் வருமானவரி தொடர்பாகவும் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. (உ-எ)

# பாதுகாப்பு நிதி அதிகரிப்பு: வேறு வழி இல்லையாம்

இராணுவம் யுத்தம் ஒன்றை நடத்துவதால் பாதுகாப்பு நிதியை அதிகரிப்பதைத் தவிர வேறு வழியே இல்லை.

புதிய வரவு-செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடுபற்றி கருத்து வெளியிட்ட திறைசேரி அதிகாரி ஒருவர் இப்படித் தெரிவித்தார்.

1992க்கான பாதுகாப்புச் செலவினம் ஆயிரத்து 530 கோடி ரூபா என்றும் —

1991 இல் பாதுகாப்புச் செலவினமாக ஆயிரத்து 170 ரூபா ஒதுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

# மேலும் 4 ஈழத் தமிழர்கள் பாம்பன் கடலில் கைது!

## ஆயுதங்கள் கடத்த முயன்றனராம்

சென்னை, நவ. 13

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கடத்த முயன்றதாகக் கூறப்படும் மேலும் நான்கு ஈழத் தமிழர்களை தமிழ்நாடுப் பொலிஸார் பாம்பன் அருகே கடலில் வைத்துக் கைது செய்ததாக நேற்று அறிவிக்கப்பட்டது.

மேற்படி நால்வரும் சென்று கொண்டிருந்த படகை ஹெலிக்கொப்டர் மூலம் கண்டறிந்து பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது என்றும்—

பொலிஸாரைக் கண்டதும் படகில் இருந்தவர்கள் ஆயுதங்களைக் கடலில் வீசியெறிந்தனர் என்றும் —

பொலிஸார் படகைக் கைப்பற்றி, அதில் இருந்தவர்களையும் கைதுசெய்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

படகில் இருந்த ஒருவர் தப்பிவிட்டாராம்.

கைதுசெய்யப்பட்ட நால்வரும் மண்டபம் அகதி முகாமில் முன்னர் தங்கியிருந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]


## மீண்டும் போக்குவரத்துச் சேவை

துணுக்காய் போக்குவரத்துச் சேவை 18 - 11 - 1991 தொடக்கம் ஆரம்பமாக உள்ளது.

வவுனியாவிலிருந்து பரந்தன், கிளிநொச்சி, மாங்குளம் ஊடாக 66 சிறீ 91 தட்டிவான் சேவையில் ஈடுபடும்.

நாதன்,
உரிமையாளர்.

[18734]


## மரண அறிவித்தல்கள்

### தங்கம்மா கந்தையா

ஊர்காவற்றுறை புளியங்கூடலைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பு கந்தையா அவர்களின் அன்பு மனைவி தங்கம்மா அவர்கள் காலமாகிவிட்டார். இவர் மகேஸ்வரி, நாகேஸ்வரி, வேதநாயகி, பரநிருபசிங்கம், மகாலிங்கம், தருமலிங்கம் ஆகியோரின் தாயாரும், கந்தசாமி, காலஞ்சென்ற துரைசிங்கம், மகேஸ்வரன், மணி, தவநிதி, கலாவதி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மானிப்பாய் வீதி, V. S. ஒழுங்கையில் அமைந்துள்ள இல்லத்தில் 12-11-1991 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
சுமதி கந்தசாமி.

V. S. ஒழுங்கை,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (18733)

### இரத்தினம் கணேசலிங்கம்

இல. 12, மூர்த்தவிநாயகர் வீதியைச் சேர்ந்த திரு. இரத்தினம் கணேசலிங்கம் பிரான்ஸில் 07-11-91 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் இரத்தினம் - இராசமணி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் சரஸ்வதியின் பேறாமகனும், குகனேஸ்வரியின் அன்புக்கணவரும், சண்முகராசா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், திருமதி விமலதாஸ் மதுமதி, ரமேஸ் (பிரான்ஸ்), வீரமரணமடைந்த துணைப்படை வீரன் சபேஸ் (குட்டி), கவிதா (நல்லூர் சி. சி. த. க. பாடசாலை மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசேஸ்வரி, கனகம், பிகேஸ்வரி, சிவானந்தம், ஞானேஸ்வரி, யோகேஸ்வரன் (பிரான்ஸ்), உதயகுமார் (பிரான்ஸ்), சகுந்தலாதேவி, சற்குணராஜா (ஜேர்மனி), மகேந்திரராஜா, திருச்செல்வராஜா, இராஜமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. மு. துரைசிங்கம், திரு. கு. திருநாவுக்கரசு, திரு. க. சுப்பிரமணியம், யோகாம்பிகை, ஜெயக்குமாரி (பிரான்ஸ்), யோகராசா, ஜெயசீலன், அருள்நேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், விமலதாஸின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் 08-11-91 வெள்ளிக்கிழமை நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

இல. 12, மூர்த்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [18732]

## மரண அறிவித்தல்

### சிவக்கொழுந்து இராசரத்தினம்

(இளைப்பாறிய D.O.A., A.C.L.G., யாழ்ப்பாணம்)

காலஞ்சென்ற சிவக்கொழுந்து - அன்னம்மா தம்பதியின் அன்பு மகன் இராசரத்தினம் (இளைப்பாறிய D.O.A., A.C.L.G., யாழ்ப்பாணம்) 10-11-1991 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இராசையா - கனகம்மா தம்பதியின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், குமுதினி (வைத்திய மாணவி, பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா), கிரிதரன் (சென். ஜோன்ஸ் கல்லூரி, உயர்தர மாணவன்) ஆகியோரின் அன்பு தந்தையும், சண்முகராஜா (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) அவர்களின் அன்பு மாமனாரும், திரு. கனகரட்ணம், திருமதி பரஞ்சோதி, திரு. மகாரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. யோகரட்ணம், திரு துரைராஜா, திருமதிகள் சுந்தரலட்சுமி, சொர்ணம், ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-11-1991 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இரா. குணேந்திரன்

அரிகிலியக் தோப்பு,
இல. 251, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். [18752]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org